# CENTRE FOR MONITORING ELECTION VIOLENCE

# මැතිවරණ ප්‍රචණ්ඩත්‍රියා නිරීක්ෂණ මධ්‍යස්ථානය

# தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம்

24/2, 28th Lane, Off Flower Road, Colombo 7.

**Tel: 11 4062180-190, 011 2565304, Fax: 011 4714460, 0114503001**.

**E-mail:** cmev@cpalanka.org **Website:** www.cmev.org


## ஜனாதிபதித் தேர்தல் 2015

### தேர்தலுக்கு பின்னதான ஊடக அறிக்கை இல 01

**ஜனவரி 12, 2015**

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிப்பதற்கான நிலையம் (தே.வ.க.நி) தேர்தலுக்கு பின்னதான நிலைமையை தொடர்ந்தும் கண்காணித்ததுடன் ஜனவரி 9 – 12 காலப்பகுதியினுள் பல சம்பவங்கள் முறையிடப்பட்டதையும் அவதானித்தது. தற்போது, தே.வ.க.நி இந்த தேர்தலுக்கு பின்னதான காலத்தில் 11 பாரிய சம்பவங்களையும் மற்றும் 6 சிறிய சம்பவங்களையும் பதிவு செய்துள்ளது. தேர்தலுக்கு பிந்திய வன்முறைகளில் ஒரு உயிரிழப்பும் மற்றும் பல தாக்குதல்கள், அச்சுறுத்தல் மற்றும் மிரட்டும் நடவடிக்கைகள் நிகழ்ந்த சம்பவங்கள் உள்ளன. அறிவிக்கப்பட்ட சம்பவங்களில் பாதிக்கப்பட்டவர்கள் கூடுதலாக ஐ.ம.சு.கூ இலிருந்தானவர்கள் என்பதை தே.வ.க.நி அவதானிக்கிறது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனா தேர்தலுக்குப் பிந்திய காலத்தில் வன்முறையற்ற நிலைமையை வலியுறுத்தியதை தே.வ.க.நி கவனத்தில் கொள்கிறது ஆனாலும் நிகழும் சம்பவங்கள் துரதிர்ஷ்டவசமாக அரசியல் ரீதியான எதிர்தரப்பினரை குறிவைப்பதாக காணப்படுகின்றன. அரசியல் கட்சிகள் மற்றும் அதன் தலைவர்கள் தங்களது உறுப்பினர்களும் மற்றும் ஆதரவாளர்களும் வன்முறைகளிலிருந்து விலகியிருப்பதை உறுதிப்படுத்துவதுடன் சம்பந்தப்பட்ட அதிகாரங்கள் சுயாதீனமான புலன்விசாரணைகளை மேற்கொண்டு குற்றமிழைத்தவர்களை வன்முறைக்கு பொறுப்பாக நிறுத்துவதற்கும் தே.வ.க.நி வலியுறுத்துகிறது.

பின்வருவன தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்ட சில சம்பவங்களாகும்:

**ஜனவரி 10, புத்தளத்தில் மூன்று பேர் காயமடைந்து மற்றும் ஒருவர் உயிரிழப்பு**

சிலாபம், கும்புட்டுக்குளியாவில் ஒரு கொலை பற்றி தே.வ.க.நி அறிவிக்கப்பட்டது. வர்ணக்குலசூரிய மஞ்சுள பிரசன்ன என்பவர் உட்பட, ஆறு ஐ.தே.க ஆதரவாளர்கள் பங்கதெனியாவிலிருந்து கும்புட்டுக்குளியாவிற்கு பிற்பகல் சுமார் 1.50 அளவில், ஐ.ம.சு.கூ இன் ஒரு ஆதரவாளரான ஜே.ஆர்.சரத், மற்றும் அவரது மகன் ஆகியோரிடம் விஜயம் செய்தனர். அங்கு இரண்டு தரப்புகளுக்கும் இடையில் ஒரு மோதல் உருவாகி, அதில் மஞ்சுள பிரசன்ன தலையில் காயமடைந்தார். பின்னர் அவர் காயங்கள் காரணமாக உயிரிழந்ததுடன் அன்றைய தினம் சிலாபம் ஆதார வைத்தியசாலையில் உயிரிழந்துவிட்டார் என அறிவிக்கப்பட்டார்.

தே.வ.க.நி , சிலாபம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி கஸ்தூரியாரய்ச்சியுடன் பேசிய போது, சந்தேகநபர்கள் கைது செய்யப்பட்டு புலன்விசாரணைகள் நடைபெற்று வருவதாகத் தெரிவித்தார். இந்த மோதலின் போது காயங்களைப் பெற்ற மூன்று பேர்கள் சிலாபம் வைத்தியசாலையில் மருத்துவ சிகிச்சை பெற்று வருகின்றனர்.

**ஜனவரி 10, குருநாகல், நிக்கவரெட்டியவில் அச்சுறுத்தல்**

ஓர் இனந்தெரியாத துப்பாக்கிதாரி எச்.எம். பிரியாந்தி ஹிருக்குமாரி (தேசிய ஜனநாயக முன்னணி) என்பவரின் நிக்கவரெட்டியாவிலுள்ள அவரது வீட்டிற்கு ஜனவரி 9 ஆம் திகதி இரவு 8.30 அளவில் வந்து, அரசியலில் ஈடுபட

வேண்டாமென அவரை அச்சுறுத்தினார். அச்சுறுத்தலை மேற்கொண்டவர் வீட்டிற்கு வந்த போது பிரியாந்தி கணவருடன் வீட்டில் இருந்துள்ளதோடு, அவசர அழைப்பு இலக்கம் 119 ஐ அழைத்துள்ளார். பொலிசில் முறைப்பாடு பதியப்படவில்லை.

**ஜனவரி 11, அநுராதபுரத்தில் தார்த் தாக்குதல்**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர் பி.ஜி.பிரேமச்சந்திர அவர்களின் இல. 534, ஹிருலுனிக்கவெவ, கிளென்பிடுனுவெவ எனுமிடத்தில் அமைந்துள்ள வீடு, நேற்று இரவு 10.30 அளவில் மோட்டார் சைக்கிளில் வந்த இரண்டு இனந்தெரியாத நார்களினால் தாரை உபயோகித்து சேதமாக்கப்பட்டது. இது தொடர்பில் பொலிசில் ஒரு முறைப்பாட்டை பதியவில்லையென, திரு.பிரேமச்சந்திர தே.வ.க.நி இற்கு அறிவித்தார்.

**ஜனவரி 11, அநுராதபுரத்தில் தார்த் தாக்குதல்**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர் நோயல் இந்திக்க பிரேமவன்ச என்பவரின் வீடு நேற்று அதிகாலை 1.3 அளவில் இனந்தெரியாத குழுவினால் தார் கொண்டு தாக்கப்பட்டது.

கலேன்பிடுனுவெவ பொலிஸ் நிலையத்தின் படி, அவர்களுடன் முறைப்பாடு எதுவும் மேற்கொள்ளப்படவில்லை.

**ஜனவரி 11, அநுராதபுரத்தில் தார்த் தாக்குதல்**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர் பி.கே.டி.மதுஷான் அவர்களின் இல. 530, ஹிருலுனிக்கவெவ, கிளென்பிடுனுவெவ எனுமிடத்தில் அமைந்துள்ள வீடு, நேற்று இரவு 10.30 அளவில் இனந்தெரியாத நபர்களின் ஒரு குழுவினால் தாரை உபயோகித்து சேதமாக்கப்பட்டது.

கலேன்பிடுனுவெவ பொலிஸ் நிலையத்துடன் மேற்கொள்ளப்பட்ட விசாரணையின் படி, இந்த சம்பவம் தொடர்பாக எந்த முறைப்பாட்டையும் பொலிஸ் நிலையம் பெற்றுக் கொள்ளவில்லை.

**ஜனவரி 11, அநுராதபுரத்தில் தார்த் தாக்குதல்**

ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளரான கே.ஜி.மல்லிக்கா மீது, இனந்தெரியாத ஆட்களினாலான ஒரு தார்த் தாக்குதல் குறித்து அறுராதபுரத்திலிருந்து ஒரு முறைப்பாட்டை தே.வ.க.நி பெற்றுக் கொண்டது. வீட்டின் தோட்டத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த 64-6463 இலக்கமுடைய ஒரு வெள்ளை வான் மற்றும் வீட்டின் முன்பகுதி மற்றும் பக்கச் சுவர்கள் என்பனவும் இந்த தாக்குதலில் சேதமடைந்தன. ஒரு பொலிஸ் முறைப்பாடு பதியப்படவில்லை.

**ஜனவரி 11, அநுராதபுரத்தில் ஐ.ம.சு.கூ ஆதரவாளரை அச்சுறுத்தி தாக்க முயற்சித்தமை**

ஐக்கிய தேசியக் கட்சி ஆதரவாளரான் அநுர பண்டார என்பவர், கலேன்பிடுனுவெவ ஐ.தே.க கட்சி அலுவலகத்தின் முன்னால், ஐ.ம.சு.கூ ஆதரவாளர் பி.கே.மனுக்க மதுஷான் என்பவரை அச்சறுத்தி தாக்குவதற்கு முயற்சித்ததாக தே.வ.க.நி ஒரு முறைப்பாட்டை பெற்றுக்கொண்டது.

இந்த சம்பவம் தொடர்பாக பொலிஸ் முறைப்பாடு எதுவும் மேற்கொள்ளப்படவில்லையென கலேன்பிடுனுவெவ பொலிஸ் நிலையம் தே.வ.க.நி இற்கு அறிவித்தது.

**ஜனவரி 11, மட்டக்களப்பில், மைத்திரிபால சிறிசேனாவின் ஆதரவாளர் தாக்கப்பட்டார்**

ஜனாதிபதி மைத்திரிபால சிறசேனாவின் ஆதரவாளர் ஒருவர் நேற்றுத் தாக்கப்பட்டதாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கபபட்டது. பாதிக்கப்பட்ட திரு.ஜெயரட்னம் என்பவரின் கூற்றுப்படி, தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் இயக்க ஆதரவாளர்கள் கூர்மையான கத்திகளைக் கொண்டு தனது கைகளில் வெட்டிக் காயப்படுத்தியதுடன் திரு.சிறிசேனாவின் ஆதரவாளர்கள் யார் எனத் தெரிவிப்பதற்கு கேட்டுத் தன்னை அச்சுறுத்தியதாக தெரிவித்தார்.

பாதிக்கப்பட்டவர் வாழைச்சேனைப் பொலிஸ் நிலையத்தில் ஒரு முறைப்பாட்டை (141/30) பதிவு செய்தார். வாழைச்சேனை பொலிஸ் அதிகார் திரு. எம்.பி. திபெட்டுமுவே என்பவரின் படி, புதிதாக தெரிவு செய்யப்பட்ட ஜனாதிபதியின் வெற்றிக் கொண்டாட்டம், வன்முறையில் முடிவடைந்தது என்று கூறினார்.

**ஜனவரி 11. அநுராதபுரத்தில் தாக்குதல்**

நேற்று காலை மூமார் 10 மணியளவில் ஹ்ீருலுனிக்கவெவ எனுமிடத்திலுள்ள ' பிலிமி பன்சல' என்பதற்கு முன்னால் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பு ஆதரவாளர்களான பி.தயாபால மற்றும் விஜேரத்ன என்பவர்கள் தாக்கப்பட்டதாக தே.வ.க.நி இற்கு அறிவிக்கப்பட்டது. தாகக்குதலுக்குள்ளானவர்களின் கூற்றுப்படி, ஐ.தே.க ஆதரவாளரான அநுர பண்டார என்பவர் அவர்களைக் கன்னத்தில் அறைந்து தூஷித்தார். மேலும், அவர் தயாபாலா என்பவருக்கு வெடி வைப்பதாகவும் அச்சுறுத்தினார். பொலிஸ் முறைப்பாடு பதியப்படவில்லை.

**ஜனவரி 9, கண்டியில் தாக்குதல்**

பொபி தசநாயக்க உட்பட ஆறு பேர்கள், ஐ.ம.சு.கூ எதிர்க்கட்சித் தலைவர் கே.வி.எஸ் அபேவிக்கிரம என்பவரின் வீட்டை உடைத்து உட்புகுந்த ஒரு சம்பவம் பற்றி, திரு.அபேவிக்கிரம தே.வ.க.நி இற்கு அறிவித்தார். தாக்குதல்களை மேற்கொண்டவர்கள் வீட்டின் பால்கனியிலிருந்து, அவரது மூத்த மகனான நிபுண என்பவரைக் காயப்படுத்தி உள்ளே நுழைந்தனர். இரு தரப்புகளுக்குமிடையே போராட்டம் ஏற்பட்டு இரு தரப்புகளும் காயங்களுக்கு உள்ளாகினர். வீட்டிற்கு அருகிலுள்ள பிலிமத்தலாவ பரணகல தேவாலயத்திருந்து சம்பவத்தை நேரில் கண்ட சாட்சியான, தம்பிட்டிய வனரத்ன தேரோ, சம்பவத்தை உறுதி செய்தார். CIB 5/2015 என்ற இலக்கத்தின் கீழ் ஒரு பொலிஸ் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது.

**ஜனவரி 8, திருகோணமலை ஐ.ம.சு.கூ. பிரதேச சபைத் தலைவர் வீட்டின் மீது கல்லெறி**

இனந்தெரியாத ஆட்களால் பிரதேச சபைத் தலைவர் கபில நுவன் அத்துக்கோரளையின் வீடு கல்லெறிக்கு உள்ளானது என திருகோணமலையிலிருந்து ஒரு முறைப்பாட்டை தே.வ.க.நி பெற்றுக் கொண்டது.

தேர்தல் வன்முறைகளைக் கண்காணிக்கும் நிலையம் (தே.வ.க.நி), தேர்தல் வன்முறைகள் தொடர்பான சம்பவங்களைக் கண்காணிப்பதற்காக மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம் (மா.கொ.நி), சுதந்திர ஊடக இயக்கம் (FMM) மற்றும் ஒரு சுயாதீன மற்றும் கட்சிச் சார்பற்ற ஸ்தாபனமாக அரசியல் வன்முறைகளுக்கெதிரான ஒரு கூட்டமைப்பு என்பவற்றினால் 1997 இல் உருவாக்கப்பட்டது. தற்போது, தே.வ.க.நி மாற்றுக் கொள்கைகளுக்கான நிலையம், சுதந்திர ஊடக இயக்கம் மற்றும் இன்போர்ம் மனித உரிமைகள் ஆவண நிலையம் என்பவற்றால் உருவகிக்கப்படுகிறது.

தே.வ.க.நி இன் அனைத்து அறிக்கைகள் மற்றும் ஊடக அறிக்கைகள் என்பவற்றை **www.cmev.org** எனும் இணைய தள முகவரியில் பார்வையிடலாம்.



கலாநிதி. பா. சரவணமுத்து
இணை அமைப்பாளர்